தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 02.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 12955/A/2023**

Thiru.Kumari R Gobi — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர்/
மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக
உதவியாளர் (தனியார் பள்ளிகள்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்டக் கல்வி அலுவலகம்,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 001

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் அன்று (15.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையில் மனுதாரர் Thiru.Kumari R Gobi அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. த. திருநாவுகரசு, கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், நாகல்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் 01.01.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், St. Mary's Middle School, Amanattantheri, Melmidalam, Kanyakumari District கல்வி நிறுவனத்தில நன்கொடைகள் வாங்குவது உண்டு எனில் வாங்கும் அதிகபட்ச நன்கொடை குறித்த முழு தகவல், மேற்படி கல்வி நிறுவனத்தில் வாங்கும் கல்வி கட்டணம் குறித்த முழு தகவல் வகுப்பு வாரியாக போன்ற 5 இனங்களில் தகவல் வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் எதும் அளிக்காத காரணத்தால் மனுதாரர் பிரிவு **19(1)**-ன் கீழ் 24.04.2023 தேதியிட்ட முதலாம் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் ஏதும் அளிக்காத காரணத்தால் மனுதாரர் 17.07.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்

அடிப்படையில் இவ்வழக்கு 16.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. அன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை Bethalahem New CBSE Central High School, Moosari, Karungal, Kanyakumari District சார்பில் 20.06.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. அன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தும் மனுதாரருக்கு அனுப்பிய ஒப்புகை அட்டையின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவே, இவ்வாணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) இக்கோப்புத் தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்ளையும் இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 20.05.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

இவ்வாணையம் 16.04.2026 அன்று பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து, ஆணையத்தின் உத்தரவின் அடிப்படையில், 02.07.2026 அன்று திரு. த. திருநாவுகரசு, கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், நாகல்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் ஆஜராகி மனுதாரர் கோரிய தகவல்களுக்குரிய தகவலை 26.01.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்புதலட்டையுடன் கூடிய விரைவஞ்சலில் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகல், மனுதாரர் அளித்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவலின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ***இதன் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி,ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 12955/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர்/
மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக
உதவியாளர் (தனியார் பள்ளிகள்),
மாவட்டக் கல்வி அலுவலகம்,
நாகர்கோவில்,
**கன்னியாகுமரி மாவட்டம்** - 629 001

**<u>மனுதாரர்</u>**

Thiru.Kumari R Gobi
31-72M, Kamala Home,
North Road,
Marthandam Post.
**கன்னியாகுமரி** - 629165

RA/PC 02.07.2026